Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

C.C. **No. 82/ 2013**

Depositions of Abdulmajith - ..witness for ...Prosecution Side Witness 1 (LW- 1)

Name - அப்துல்மஜித் (PW- 1 )
Father's and Husband's name -
Village -
Taluk -
Caste -
Calling -
Religion -
Age -

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.07.2023

முதல் விசாரணை-

நான் போடிநாயக்கனூாரில் உள்ள புதூரில் குடியிருந்து, ரத்தபரிசோதனை நிலையம் வைத்து நடத்தி வருகிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். எழுத்துபூர்வமான சத்தியபூர்வமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மனுதாரர் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| **வரிசை எண்.** | **தேதி** | **ஆவண விவரங்கள்** | **தன்மை** | **குறியீடு** |
|---|---|---|---|---|
| 1 | 14.12.2012 | முறையீட்டாளருக்கு குற்றம் சாட்டப்பட்டவர் / எதிரி கொடுத்த போடி கிளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, காசோலை | அசல் | ம.சா.ஆ.1 |
| 2 | 14.12.2012 | வங்கியில் செலுத்தியதற்கான ரசீது | அசல் | ம.சா.ஆ.2 |
| 3 | 17.12.2012 | முறையீட்டாளர் வங்கி கிளை குற்றம் சாட்டப்பட்டவர் / எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லை (Fund Insufficient) என கொடுத்த ரிட்டன் மெமோ | அசல் | ம.சா.ஆ.3 |
| 4 | 25.12.2012 | முறையீட்டாளர், குற்றம் சாட்டப்பட்டவர் / எதிரிக்கு அனுப்பிய கூரியர் ரசீது | அசல் | ம.சா.ஆ.4 |
| 5 | 26.12.2012 | முறையீட்டாளர், குற்றம் சாட்டப்பட்டவர் / எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பபட்ட அஞ்சலக உறை | அசல் | ம.சா.ஆ.5 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

G K VELUMAYIL Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.07.18 17:41:38 +0530

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

Crl.M.P. **No. 4597/ 2023**

Depositions of Ramkumar- Petiitoner

| | | |
|---|---|---|
| Name | - | ராம்குமார் |
| Father's and Husband's name | - | |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.07.2023

மனுதாரர் சத்திய பிரமாண வாக்குமூலம்

நான் திருமலாபுரத்தில் குடியிருந்து இலவ பஞ்சு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 02.03.2022 ஆம் தேதி அங்கீத்அகர்வால் என்பவர் எனது வீட்டிற்கு வந்தார். ரூ.75,000 க்கு பஞ்சு வேண்டும் என்று கூறினார். நான் பணத்தை தந்தால் பஞ்சு தருவேன் என்று கூறினேன். அவர் 3 காசோலைகளை கொடுத்து பணத்தை வங்கி கணக்கில் செலுத்திவிடுவதாக கூறி பஞ்சுகளை ஏற்றி கொண்டு சென்றுவிட்டார். அதன் பின்னர் 02.04.2022 ஆம் தேதி HDFC வங்கிக்கான 000011, 000012, 000015 ஆகிய 3 காசோலைகளை என்னிடம் கொடுத்துவிட்டு சென்றார். மேற்படி 3 காசோலைகளும் தலா ரூ.25000 க்கானதாகும். மேற்படி காசோலை தேதியன்று அங்கித்அகர்வாலை கைபேசியை தொடர்பு கொண்ட போது அவர் போனை எடுக்கவில்லை. 07.04.2022 ஆம் தேதி என்னுடைய போடி நாயக்கனூர் இந்தியன் வங்கி கிளையில் 000011 என்ற காசோலையை மட்டும் வசூலுக்கு தாக்கல் செய்த போது கணக்கு முடிக்கப்பட்டதாக கூறி எனது வங்கிக்கு திருப்பி அனுப்பபட்டது. 18.04.2022 ஆம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் காசோலை திருப்பபட்டது குறித்து அறிவிப்பு அனுப்பினேன். 23.04.2022 ஆம் தேதி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுகொண்ட பிறகும் மேற்படி பதிலறிவிப்பு அனுப்பவில்லை. 000012 காசோலையை 18.05.2022 ஆம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தபோது கணக்குமுடிக்கப்பட்டது என்ற காரணத்தினால் 19.05.2022 ம்தேதி திருப்பபட்டது. 13.09.2022 ஆம் தேதி 000015 என்ற காசோலையை வசூலுக்கு செலுத்தியபோது கணக்குமுடிக்கப்பட்டது என்ற காரணத்திற்காக 14.09.2022 ஆம் தேதி திருப்பபட்டது. 14.11.2022 ஆம் தேதி போடி நகர் காவல்நிலையத்தில் ஆன்லைன் மூலமாக புகார் அளித்தும் வழக்கு எதுவும் பதிவு செய்யாமலும் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. 06.03.2023 ல் தேனி காவல்கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மேல் முறையிடு செய்தேன். காவல் துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளேன்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 02.04.2022 | எதிரி வாதிக்கு கொடுத்த HDFC வங்கி கயா கிளையில் மாற்றக்கூடிய 000011 என்ற எண்ணுள்ளள காசோலை | அசல் |
| 2 | 08.02.2022 | மேற்படி காசோலை திருப்பபட்டதற்காக இந்தியன் வங்கி கிளையில் கொடுத்த ரிட்டன் மெமோ | அசல் |
| 3 | 02.05.2022 | எதிரி வாதிக்கு கொடுத்த HDFC வங்கி கயா கிளையில் மாற்றக்கூடிய 000012 என்ற எண்ணுள்ளள காசோலை | அசல் |
| 4 | 19.05.2022 | மேற்படி காசோலை திருப்பபட்டதற்காக இந்தியன் வங்கி கிளையில் கொடுத்த ரிட்டன் மெமோ | அசல் |
| 5 | 02.08.2022 | எதிரி வாதிக்கு கொடுத்த HDFC வங்கி கயா கிளையில் மாற்றக்கூடிய 000015 என்ற எண்ணுள்ளள காசோலை | அசல் |
| 6 | 14.09.2022 | மேற்படி காசோலை திருப்பபட்டதற்காக இந்தியன் வங்கி கிளையில் கொடுத்த ரிட்டன் மெமோ | அசல் |
| 7 | 14.11.2022 | வாதி எதிரி மீது போடி நகர் காவல்நிலையத்தில் கொடுத்தபுகார் மனு | கை நகல் |
| 8 | 14.11.2022 | மேற்படி புகார் அனுப்பியதற்கான இணையதள ரசீது | கணினி நகல் |
| 9 | 06.03.2023 | வாதி எதிரி மீது தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு | கை நகல் |
| 10 | 06.03.2023 | மேற்படி புகார்மனு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது | அசல் |
| 11 | | மேற்படி புகாரினை தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை ரசீது | கணினி நகல் |